# சிறுவர் துஷ்பிரயோகத்தால்

## மாணவர் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்



ஆரதி இளங்கோவன்

'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கை வேதமாகப் போற்றும் உலகு இன்று ஒரு கானல் நீர்ச்சோலையில் அவற்றையெல்லாம் புதைத்துவிட்டு உழல்கிறது. நமக்கு முந்தைய தலைமுறையினர் எத்தனையோ போராட்டங்களுக்கு பிறகு பெற்றுத்தந்த உரிமைகளின் பிரகாசத்தை தொலைத்து மங்கிய வெளிச்சத்தில் பயணம் செய்கிறோம். அன்றைய நாளின் மறைந்த ஒளியை பெற நாம் செயற்படுத்த வேண்டிய சக்தி மிகு ஒரே ஆயுதம் இன்றைய சிறுவர்களே என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமில்லை.

இலங்கையின் சிறுவர் உரிமை மீதான சமவாயத்தின் உறுப்புரை 01 இன்படி, 18 வயதிற்குட்பட்ட ஒவ்வொரு மனித உயிரும் சிறுவர்கள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் எனப்படும் சக்திக்கு கூட இன்று சோதனை வந்துள்ளது. நமக்கு கிடைத்த வளங்களுள் விலை மதிப்பற்ற வளமாக சிறுவர்கள் எண்ணப்படுகிறார்கள். இவர்களை நல்லாரோக்கியமானவர்களாக எதிர்காலச் சவால்களைச் சந்திக்கக்கூடியவராக மனவுறுதி படைத்தவர்களாக, தன்னம்பிக்கை, துணிவு, ஆக்கபூர்வ மனப்பாங்கு என்பவற்றுடன் திடகாத்திரமாக வழிநடத்த வேண்டிய பொறுப்பு எம்மனைவருக்குமுரியது. நம் நாட்டின் கடந்த முப்பது வருட கால யுத்த சூழ்நிலை அவர்களின் மனதைப் பாரப்படுத்தியுள்ளது. இன்று சிறுவர்கள் உழைப்பினாலும் கொடுமைப்படுத்துவதினாலும் பாலியல் துன்புறுத்தல்களினாலும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளனர். இவற்றை போக்கி சிறந்த சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பில் நாம் உள்ளோம்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற சொல்லாடல் பலராலும் உச்சரிக்கப்படுவதை அவதானிக்கிறோம். சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படுவது 'ஒரு பிள்ளையின் மீது உடல் ரீதியாக அல்லது மனவெழுச்சி ரீதியாக மேற்கொள்ளப்படும் தீங்குகளாகும். ஐக்கிய நாடுகள் சபையின் கருத்துப்படி இலங்கையும் சிறுவர் தொடர்பான சாசனங்களை வெளியிட்டது. சாசனத்தின் முக்கிய அம்சங்களாக உயிர் வாழ்வதற்கான உரிமை, முழு ஆற்றலை அபிவிருத்தி செய்ய வாய்ப்பளித்தல், அனாதைகள், சிறுவர் தொழிலாளர்கள், பாலியல் ரீதியாகத் துன்பப்பட்டோர் போன்றவர்களுக்கு பாதுகாப்பளித்தல் கருத்து வெளிப்பாட்டின் சுதந்திரம், சமயம், உரிமைகளைப் பேணல் என்பன உள்ளன. மேற்கூறியவை மறுக்கப்படும் போது அது சிறுவர் துஷ்பிரயோகமாகக் கொள்ளப்படும்.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் உடல் சார்ந்த வன்செயல்களாக உடல்ரீதியான தண்டனை வழங்குவதும் அடங்கும். பாலியல் துஷ்பிரயோகம் இன்று காட்டுச் செடிபோன்று வளர்ந்து நின்றாடுகிறது. இது மிகவும் வெட்கப்படத்தக்க விடயமாகும். பாலியல் துஷ்பிரயோகத்தில் பிள்ளைகள் பல பாதிப்புகளுக்குள்ளாகின்றனர். பாலியல் நோய்கள் தொற்றல், விரும்பத்தகாத கருத்தரிப்பு, மனச்சோர்வு மற்றும் உளரீதியான பாதிப்பு, சமூகக் களங்கம் என்பவற்றை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. இதன் உச்சகட்டமாக முஸ்லிம் கலகத்தில் [இந்தியா – பாகிஸ்தான்] தமது பெண்கள் எதிரிகளால் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டால் இழிவு என்று தாமே தமது பெண் பிள்ளைகளையெல்லாம் கொன்று விட்டனர்.

எழுநூறு கோடி மக்களில் முந்நூறு கோடி பெண்கள் அவர்களில் மூன்றிலொரு பங்கினர் தமது வாழ்க்கையில் ஒரு தரமேனும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். [உடல் ரீதியான தொந்தரவு] உலக மயமாக்கலின் பாரியதொரு மறைமுக விளைவே இவையெல்லாமாகும். உலகமயமாக்கலால் பத்து வீதத்திற்கும் குறைவான நபர்கள் மட்டுமே பயனடைந்திருக்க... அது நமது மொத்த சமூகத்திலும் , தனி மனித வாழ்க்கையிலும் ஏற்படுத்தி இருக்கும் மாபெரும் சீரழிவுகள் இன்று பிரமாண்டமான அச்சுறுத்தலாக திரிபடைந்துள்ளது.

தேவையற்ற பல உள்வருகைகளால் [போதைப்பொருள்] பிள்ளைகள் அவற்றிற்கு அடிமையாக்கப்படுகின்றனர். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பிரகாரம் இணையத்தளமூடாக அநாவசியமான தகாத தகவல்களைப் பெற்று இளைய சமூகம் கெட்டுக் குட்டிச்சுவராகிறது. எதையெல்லாம் சாதிக்க வேண்டிய இளைய தலைமுறையினர் இன்று மாய வலைக்குள் சிக்குண்டு கிடப்பதாகத் தோன்றுகிறது. இவ்வாறான நிலைமையில் தோன்றுகின்ற சவால்களை சமாளித்து போகக் கூடாது. அதை உடைத்தெறிய வேண்டும். இதற்கான கடமைகளை நாமே முன்னின்று முனைப்புடன் செய்வதன் மூலம் எமது சமூகத்தை காப்பாற்ற முடியும். சிறுவர், சிறுமிகளைத் தங்கள்வசமிழுக்க முற்படும் பலரின் பாவனைப் பொருள் இணையத்தளமாகி விட்டது. அபாயத்தின் வலை விரியத் தொடங்கி விட்டது. குழந்தைகளைத் தவறான முறையில் தொடுவது தங்களது கீழ்த்தரமான இச்சைகளுக்குப் பயன்படுத்துவது போன்ற ஈனச் செயல்கள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

தனக்கு நிகழ்வது இன்னதென்று மெல்லப்புரிய வரும் போது அந்தக் குழந்தைக்கு உண்டாகும் குற்ற உணர்ச்சியும் தாழ்வு மனப்பாங்கும் , மனிதர் மீதான நம்பிக்கைக் குலைவும் குழந்தையின் மனதில் என்றும் தீராத ரணங்களாக நிலைத்து விடுகின்றது. இவை பெண் குழந்தைகளுக்கு மட்டும் நிகழும் கொடுமை அல்ல. சதவீதத்தில் குறைவாக இருந்தாலும் ஆண் குழந்தைகளையும் இவ்வாறான பல அபாயங்கள் சூழ்ந்திருக்கவே செய்கின்றன. ஆனால் நம் கண்களை இன்னும் எவ்வளவு காலத்திற்கு மூடிக்கொள்ளப் போகிறோமோ? உங்களது குழந்தை மனம் பாதிப்புற்று படிப்புக் கெட்டு , தன்மதிப்பை தொலைத்து, போதைப் பழக்கங்களுக்கு ஆளாகும் வரைக்குமா? அதற்கும் காலக்கெடு குறைவாகவே காணப்படுகிறது.

எம் மதமும் சித்தாந்தமும் கோபதாபமும் கறைப்படுத்த முடியாத உலகத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகள். குழந்தைகளின் மேல் கூட இரக்கம் காட்டா சமூகவிரோதிகளை எந்த மதமோ அல்லது கடவுளோ மன்னிப்பாரா? இன்று நடைபெறும் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்களை நோக்குகையில் நாம் மனிதர்கள் எனும் சமூகத்தில் தான் வாழ்கிறோமா? என்ற அடிப்படைக் கேள்வி நம்முள் எழுகின்றது.

சர்வதேச அளவில் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அடுத்த பெரும் துஷ்பிரயோகமாக வேலைக்கமர்த்தப்படுதல் அல்லது சிறுவர் ஊழியம் நடத்தப்படுகிறது. சிறுவர்களை நேடியாக தொழிலுக்கமர்த்தல் அல்லது உழைப்பதற்காக அவர்களைப் பயன்படுத்தல் போராளிகளாக சேர்த்தல் என்பவை இதிலடங்கும். சர்வதேச கணக்கெடுப்பின்படி சிறுவர்களில் இருநூற்றுமுப்பது மில்லியன் சிறுவர்கள் ஊழியத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனராம். குற்றங்களுக்கு மாறுகை , மாறுகால் வழங்குவது என்பது நாகரிகமுடையதாக சமூகங்கள் கையாண்ட வழக்கம். இன்று கொலைக் குற்றத்திற்குத் தூக்குத் தண்டனை வழங்குவது தவறு என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இப்படி நமது சமூகம் இருந்தால் நமது வாழ்க்கை முறை வன்முறையை நியாயப்படுத்துவதாகவே உள்ளது. ஆனால் நமது குழந்தைகளின் வஞ்சமறியா மனதைக் காயப்படுத்தும் எச்செயலும் தண்டிக்கப்பட்டாலே அதன் வீரியம் தணிக்கப்படும். இலங்கைச் சட்டங்களும் காவல்த்துறையும் இந்தப்பிரச்சினையை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். பள்ளிகளும் சமூக அமைப்புகளும் இதில் பெருந்தன்மையோடு இணைந்து செயற்பட்டாலே ஒழிய, நம் சிறுவர் இனத்தை முன்னோக்கி கொண்டுவர முடியாது.

பிள்ளைகள் தம்மை அழுத்தும் சம்பவங்களினால் உடல் மற்றும் உளரீதியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இவ்வாறான சம்பவங்களினால் ஏற்படும் குழப்பமான, கவலையான, கோபமான, மறை உணர்வு நிலைகளும் இணைந்து கவனம் வீழ்ச்சியடைவதற்கும், கற்றலில் இடர்படுவதற்கும் காரணங்களாக அமைகின்றன. பண்பாடறியாத காமுகர்களினால் நிகழ்த்தப்படும் அல்லது நிகழ்விக்கப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் தடைகளையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்தும் அதேவேளை, கல்விச் செயற்பாடுகளில் விரும்பத்தகாத தலையீடுகள் பிள்ளைகளின் உடல் உளப் பிரச்சினைகள் உருவாகவும் காரணங்களாக அமைகின்றன.

புலனுணர்ச்சிகளுக்கு மூளையில் அளிக்கப்படும் விளக்கமே புலக்காட்சியாகும். துஷ்பிரயோகம் போன்ற ஈனச் செயல்களால் சரியான புலக்காட்சி மாறி பதிவேற்றப்படுவதனாலும் கற்றலில் இடர்பாடு ஏற்படுகிறது. படைப்பாற்றல் என்பது ஒருவர் தனது சிந்தனையினூடாக சிறப்பான வழி வகைகளைக் கையாண்டு குறிப்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் எனலாம். இவ் ஆற்றல் விரி சிந்தனையின் இயல்புகளைக் கொண்டது. ஒருவர் பிரச்சினையை எதிர்கொள்ளும் போது அப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாகவே படைப்பாற்றல் உருவாகும். இதனால் கற்றலின் திறன் மேலும் குறைக்கப்படும்.

செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளைப் படிப்பதையே நிறுத்திவிடலாமா? என்று சில சமயங்களில் தோன்றுகிற அளவிற்கு அதில்வரும் செய்திகள் வாழ்க்கை குறித்தும் மனிதர்கள் குறித்தும் மிகுந்த அவநம்பிக்கை அளிப்பதாக உள்ளது. வன்முறைகளும், துஷ்பிரயோகங்களுமே வாழ்க்கை முறையுடன் கலந்து விடுகிறது. துஷ்பிரயோகம் என்பது சமூக விரோதிகளின் குற்றம் என்பது மட்டுமல்ல. தன் மீது அமிழ்த்தி விடப்படும் துர்செயல்களை அமைதியாக ஏற்றுக் கொள்ளும் எல்லோருக்கும் இந்தக் குற்றத்தில் பங்குண்டு. இவ்வாறு சிறுவர்கள் அச்சுறுத்தப்படுவதும் துஷ்பிரயோகத்திற்குள்ளாவதும் நாம் ஒரு போலி ஜனநாயகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையே எண்ண வைக்கிறது. சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் இந்தப் போக்குகள் களையப்படாவிட்டால் அதன் விளைவையும் எம் சிறுவர்களே எதிர்நோக்க வேண்டியேற்படும்.

பொதுவான மனித நேயமும் சகிப்புத்தன்மையும் 'கடுகளவேனும் பச்சாதாபமற்ற சமூகம்' எனும் அமைப்புக்குள் வாழத் தகுதி அற்றவர்களினால் இழக்கப்படும் துஷ்பிரயோகத்திற்கு நம் குழந்தைகள் ஏன் பலியாடு ஆக வேண்டும். எமது நாடு இது போன்ற பிரச்சினைகளை புகைவட்டத்திற்குள் அடக்க எண்ணுகிறது. கர்ப்பக்கிரகத்திலுள்ள விக்கிரகங்களை கீழே இறங்கி வர எப்படி அனுமதிக்க முடியும்? அவை பாதுகாக்கப்பட வேண்டியவை அல்லவா–? எமது சுதந்திரம் அரசாலோ தனி நபராலோ பறிக்கப்படுமெனில் அது எமது சுதந்திரமல்ல. அவர்களின் சுதந்திரம் எனலாம்.

துஷ்பிரயோகம் எனும் சுவேஷத்தின் அடிப்படையில் ஏதோ வழியில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் நீதிமன்ற தீர்ப்புகளும் குற்றப்பரம்பரையினராகக் கருதி நடத்தப்படும் அப்பாவிச் சிறுவர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் நிகழ்காலத்தில் யதார்த்தமாக நாம் கண்டு வேதனையடைகிறோம். இதனைவிட பெண்கள் மீதான குடும்ப வன்முறைகள் பெண்சிசுக்கொலை, காவல் நிலைய பாலியல் பலாத்காரங்கள் போன்ற கொடுமைகளை இன்னமும் நம் பெண் சிறார்கள் அனுபவித்தபடியே உள்ளனர்.

அரசாங்கத்தைவிட மாணவர் சமுதாயத்தை இவ்வாறான ஈனச் செயல்களிலிருந்து விடுபட்டு வாழ வைக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமே அதிகமாகும். பணிவு, பண்பு, நன்னடத்தை என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். வஞ்சனை எண்ணங்களை மனதில் விதைக்கக்கூடாது. பிள்ளைகள் நற்செயலில் ஈடுபடும் போது பாராட்டியும் தீய செயல்களைச் செய்ய முற்படும் போது கண்டித்தும் திருத்த வேண்டும். இதன் மூலம் சிறுவர்களுக்கு எது நற்காரியம் எது தீயசெயல் என முடிவெடுத்துக் கொள்ள முடியும்.

துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சிறுவர்களிடையே மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, ஞாபகசக்தி குறைவு, கிரகித்தலில் இடர்பாடு, கல்வியில் பின்னடைதல் போன்ற பொதுவான அறிகைசார் வெளிப்பாடுகளை அவதானிக்கலாம். இதனை விட கடவுளை மறுதலித்தல், சமூகத்துடன் அன்னியோன்னிய உறவைப் பேண முடியாமை அத்தகைய உறவுகளைத் தவிர்க்க முயலுதல், தனிமைப்படுத்தல், சமூகத்தால் வெறுப்புணர்வை பிரதிபலித்தல் போன்ற வெளிப்பாடுகளை இழப்புகளை சந்தித்த பிள்ளைகளிடம் காணலாம். இவ்வாறான நச்சுவட்டத்துள் இருந்து சிறுவர்களை மீட்கவேண்டிய கடப்பாடு எம்மிடம் காணப்படுகிறது.

நம்மைச் சுற்றியுள்ள சூழல்கள் குறித்து குழந்தைகளிடம் அன்பையும் சக வாழ்வையும் ஏற்படுத்துவதற்குப் பதில் குரோதத்தையே வளர்க்கிறோம். எமது சமூகத்தின் சாதாரண பேச்சு வழக்கில் வந்து விழும் அவமதிப்பான கூச்சமான செயல்கள், துஷ்பிரயோகச் செயல்கள் விளிக்கும் தொனியுடன் இளமனங்களை துளைத்து ஆழமான அபிப்பிராயங்களை உருவாக்கக்கூடியவை. எதுவும் உயிர்ப்போடிருக்கையில் அது பல்வேறு நிலைகளில் பேசப்பட வேண்டும். அது முற்றிலும் மறையா விடயமாக இருந்தாலும் கூட அடிப்படையில் துஷ்பிரயோகம் பரவலாக பேசப்படும் விடயம். சமகாலத்தில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானாலும் சரி அது பற்றி கேட்டு சிந்திப்பதனாலும் குழந்தைகளின் மனதில் மாபெரும் உலகப் போரே நடந்தேறிவிடுகிறது.

எதுவும் ஒரு நோக்கினையுடையதாகவேயிருக்க வேண்டும். இன்று மிகவும் கண்டிக்கத்தக்க வகையில் பெரும் சவாலாக அமைகின்ற துஷ்பிரயோகம் என்பதைப்பற்றி விவரித்துவிட்டுச் செல்வது ஒரு சிறந்த கட்டுரையின் பண்பாகாது. எதற்கும் ஒரு தீர்வோ அல்லது தீர்மானங்களோ அல்லது ஆலோசனைகளோ முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். எமது தினசரி வாழ்வில் எதிர்நோக்குகின்ற வன்முறைகள்/ துஷ்பிரயோகங்களை திறந்து காட்டி அதையும் இனப்படுகொலைகளை எதிர்க்கும் தீவிரத்தோடு எதிர்த்துப் போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பெண்களின் உடல் மொழியைப் பெரிதும் பயன்படுத்தும் ஆண்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாறான ஈனச் செயல்களைத் தடுக்க பல அமைப்புகள் காணப்படுகின்றன. அவற்றின் செயற்பாடுகள் பற்றி என்னளவில் அறியவில்லை. சமூகத்திலும் அடையாளங்களோ மாற்றங்களோ தென்படவில்லை போலும்.

எமது அரசு பாராளுமன்றத்தினூடாக சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் முகமாக பல சட்டங்களை உருவாக்கியுள்ளனர். அமுல்படுத்தப்பட்டுள்ளவை பற்றிய தகவல்கள் சமூக நிலையை நோக்குகையில் புலப்படுவதில்லை. இருப்பினும் அவற்றைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் சிறுவர் தொடர்பான மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு (Distict Child Protection Committee) இயங்குகிறது. யுனிசெவ் நிறுவனமும் இதனுடன் இணைந்து செயற்படுகிறது. பொலிஸ் நிலையத்தில் பெண்கள் சிறுவர் பாதுகாப்புக்கென தனிப் பிரிவுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மருத்துவ சுகாதார காரியாலயம் (M.O.H.OFFICE) போதைப்பொருள் பாவனையிலிருந்தும் துஷ்பிரயோகங்களிலிருந்தும் சிறுவர்களை மீட்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பல அமைப்புகளின் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்தரங்குகள் துண்டுப்பிரசுரங்கள் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை போதியளவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. குறிப்பாக கிராமப் புற பெற்றோர்க்கு சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய போதிய விளக்கமற்ற நிலைப்பாடு காணப்படுகிறது. இதற்கென பாரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் இன்னும் காணப்படும் பெரிய குறையென்ன இல்லை பெற்றோர், சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக முறையீடு செய்ய அஞ்சுவதேயாகும். நீதிமன்றங்களில் இன்று அநாமதேய மனுக்கள் கூட பரிசீலிக்கப்படுகின்றன. சட்டத்தின் முன் நிறுத்துவதால் எதிர்கால தம்பி தங்கையர்களைக் காப்பாற்றலாம்.

கல்வி எனப்படுவது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு வாழ்க்கைக்கு தயாராக்கும் நோக்கில் வழங்கப்பட வேண்டிய செயற்பாட்டுத் தொகுப்பாகும். அதனடிப்படையில் எதிர்காலத்தில் சிறப்பான அடைவு மட்டத்தை அடைகையில் இடையில் ஏற்படும் குளறுபடிகளை சமாளிக்காது உடைத்தெறிவதே எமது தேவையாக உள்ளது. துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகிய சிறுவர்களின் நலன்கருதி பெற்றோர் , ஆசிரியர்கள், சுற்றத்தார்கள் அவர்களை ஒதுக்காது அவர்களுக்கு புனர்வாழ்வளித்து, ஆலோசனை வழங்கி கல்வி எனும் பாதையில் முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்ல நாம் முன்வர வேண்டும். அத்துடன் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து தன்னை விடுவித்து நம்பிக்கையுடன் நாளாந்த செயற்பாடுகளை தொடரக் கூடியவர்களாக்க முடியும். பாடசாலையில் உளவளத்துணைச் சேவையை பிள்ளை, பெற்றுக் கொள்ளும் வகையில் சந்தர்ப்பங்களை பாடசாலை கல்விச் சமூகம் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் பிள்ளைகளின் கல்வி அடைவு மட்டத்தை அதன் மூலம் உயர்த்துவதும் முழுமையான விருத்தியை ஏற்படுத்துவதும் அதிபர், ஆசிரியர்களினது முக்கிய பணியாகின்றது.

இன்றைய மாணவர்கள் வளரும் சூழ்நிலை என்பது முன்னைய காலத்தைப் போன்றதல்ல. அவன் உலக மயமாக்கலாலும் நுகர்ப் – பொருள் கலாசாரத்திலும் சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் நடுவே வளர்கிறான். எனவே முன்பு எப்போதையும் விட கூடிய வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. மாணவர்களின் எண்ண ஓட்டங்களைப் புரிந்து கொண்டு அதற்கு முறையான வழியில் விளக்கம் கூறி நல்வழிப்படுத்துவதே நமது மாணவர்களைக் குற்றங்களில்/ துஷ்பிரயோகங்களிலிருந்து தடுக்கும் முறையாகும்.

'இன்றைய சிறுவர்களே நாளைய சிற்பிகள்' கட்டுரையின் உயிர்த்துடிப்பை நோக்கமாகக் கொண்டு... நமது பள்ளிக்கூடங்கள் கற்றுத்தரும் பொது அறிவு என்பது வெகுமேலோட்டமான ஒன்றாக விடுப்பதே துஷ்பிரயோகங்கள் நிகழ்வதன் பிரதான காரணமாகும். நமது குழந்தைகளுக்குத் தொலைதூரப் பிரதேசத்தில் என்றோ வாழ்ந்த ஏதோவொரு பழங்குடியினரைப் பற்றியுள்ள அறிவு, நமது மக்களைப் பற்றி இருப்பதில்லை. 'பொது அறிவு' அவசியமில்லை என்பதல்ல இதன் பொருள் அது நம்மைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றியதாகவும் இருக்க வேண்டும். இளங்கலை முதல் முது கலைப்பட்டம் வரை கூட பாடப்புத்தகங்கள் தான் வேதமென ஆகிவிட்டது. இதனால் பாடத்திட்டமும் கல்வி முறையும் உயிர்ப்பற்ற தலைமுறையையே உருவாக்கி விடுகிறது. தற்போது எமது கல்வி முறையில் தனித்துவத்திற்குச் சற்றும் இடமில்லை. எல்லா மாணவர்களும் மருத்துவம், பொறியியல், கணினித்துறை படிக்கவே வற்புறுத்தப்படுகின்றனர். என்று தான் குழந்தைகளின் இளமைப்பருவத்தை மீட்டு உயிர்ப்புடன் தருமொரு கல்விமுறை வருமோ?

சமுதாயப் பிராணியான மனிதன் அதனுடன் வளர்கிறான். ஆகவே சமுதாயத்தில் உள்ள குறைபாடு மாணவர்களின் மனதைக் கெடுப்பதற்குக் காரணமாக இருக்கிறது. முன்னைய காலத்தைப் போல முன்னேற்றம் என்பது நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டது என்று மாணவர்களுக்குக் கண்ணெதிரே காட்டக்கூடிய வகையில் சமுதாயம் அமைந்தால் அதைப்பார்த்து துஷ்பிரயோகத்திலீடுபடும் சமூகநாசிசவாதிகள் திருந்துவார்கள். அத்துடன் விருப்புக்குரிய சுகாதாரமும் உடற்கல்வியும் கட்டாய பாடமாக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளில் Primary prevention [ வருமுன் காத்தல்] BP School Based Alcohol Education செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்

எல்லாம் பராபரமே உன் கைகளில்...

> புற்றளை மகா வித்தியாலயம்- புலோலி பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளை தினக்குரலுடன் 9 ஆவது ஆண்டாக இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டி 2015 இல் முதற் பரிசான பத்தாயிரம் ரூபா பணப் பரிசினையும் சான்றிதழினையும் பெற்ற கட்டுரை- யாழ் / வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை மாணவி ஆரதி இளங்கோவன் இதனை எழுதியுள்ளார்.